Advanced International Journal for Research (AIJFR)

E-ISSN: 3048-7641 ● Website: www.aijfr.com ● Email: editor@aijfr.com

# இலக்கியங்களில் மருத்துவ அறிவியல் சிந்தனைகள்

# Medical scientific ideas in literature

**Dr.V.Sivasankar[1], Dr. V.C. Srinivasan[2], Dr. Srinagaboshini Arangaraj[3]**

[1]Professor &Head, Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies Pallavaram, Chennai-117. hodtamil@vistas.ac.in

[2]Asst.Prof in Tamil &A.O, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 srivc2345@gmail.com

[3]Associate Professor, Department of Music, University of Jaffna, SRILANKA. yallnakam@gmail.com

## முன்னுரை

இயற்கையுடன் போராடி இயற்கையோடியைந்த வாழ்வியல் நிலையைக் கொண்டிருந்தனர் நம் முன்னோர்கள். இயற்கை வாழ்வில் தம் நுட்பமான அறிவுத்திறத்தால் தாம் கண்ட அறிவியல் உண்மைகளை மக்கள் அனைவருக்கும் பொதுவாக இலக்கியங்களில் பதிவுசெய்துள்ளனர். அன்பு, ஆளுமை, காதல், வீரம், கடமை எனப் பன்முக உணர்வுகளைப்பதிவு செய்த நம் தமிழ் இலக்கியங்களில் மருத்துவம் சார்ந்த அறிவியலைத் தேடும் முயற்சிதான் இக்கட்டுரையின் நோக்கமாகும். இயற்கை வாழ்வினை வாழ்ந்த காலத்தில் நோய்களின் தாக்கம் என்பது மிகக்குறைவே. ஆனால் அறிவியல் யுகம் என்றும் ,தமிழை அறிவியல் தமிழ் என்றும் கூறும் நவீன காலத்தில் மருத்துவம் சார்ந்த தேவைகள் அதிகம், இருப்பினும் வருமுன் காத்து வாழ்ந்த தமிழர்களின் தமிழ் இலக்கியங்கள் கூறும் மருத்துவ அறிவினை இனிக் காண்போம்.

தாவரங்களுக்கு உயிர் ,உணர்வு, அறிவு உள்ளன என்பதை தாவரவியல் அறிஞர்கள் உலகத்திற்கு உணர்த்தும் முன்னரே உலக உயிர்கள் அனைத்தையும் ஆறுவகையில் அடக்கி காண்பித்தவர் தொல்காப்பியர் (தொல்.பொருள்.மரபு ; 635) இதனை நோக்கின் தொல்காப்பியர் காலத்தில் தாவரவியல், உடற் கூற்றியல் போன்ற அறிவியல் துறைகள் மேம்பட்டிருந்தமை புலனாகின்றது.

**Keywords**

தமிழ் இலக்கியம், மருத்துவம், தொல்காப்பியம், தாவரவியல், உடற்கூற்றியல், மூலிகை அறிவு, இயற்கை வாழ்வியல், மருத்துவ மரபு

### 1. கருவாகி உருவாதல்;

உயிர்கள் கருவில் தோன்றி வளரும் அறிவியல் சார்ந்த மருத்துவ நிலைகளைக் காலந்தோறும் தமிழ் இலக்கியப் பதிவுகளில் காணமுடிகிறது. சான்றாக

இறையைப் பாடவிழைந்த பக்தி இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் இடம்பெற்றன. அதில் மருத்துவ ஆய்வக வசதிகள் இல்லாத பக்திகாலத்தில் குழந்தை கருவில் தோன்றி புவியில் உயிர்பெறும் வரையில் நிகழும் மாற்றங்களை மருத்துவர் போல படம்பிடித்துக் காட்டுகின்றார் திருவாசகர். கணவனும் மனைவியும் அன்பின் பெருக்கால் கூடுவர் அக்கூட்டத்துப் பயனால் கருவுறும் அவ்வாறு தோன்றியக் கரு,

"ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்

இருமதி விளைவின் ஒருமையின் பிழைத்தும்"

என்று கருவில் தோன்றும் உயிர் ஒரு மாதம் பூர்த்தியானதும் தான் தனக்கெனவென்று ஒரு தனிவடிவெடுத்தல் என்னும் செயலில் தேர்ச்சியடையும் இரண்டு மாதங்களில் தனது வியக்தி வளவடைதலில் ஈடேறி வளர்ச்சியடையும் மூன்றாவது மாதம் தொடங்கி ஆறாவது மாதத்தில் அவயங்கள் முறையாக அமைந்து உயிர் வாழ்ந்திருக்கும். ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது மாதங்களில் பல துன்பங்களின்று ஈடேறியும் வளரும்

"தக்கதசமதிதாயொடுதான்படுந்

துக்கசாகரத்துயரிடைப்பிழைத்தும்"

என்பதால் பத்தாவது மாதம் வரையில் தகுதியுடன் கர்ப்பத்தில் வளர்ந்து உயிர் புவியில் பிறக்கும் பொழுது தாயும் சேயும் ஆகிய இருவரும் துன்பம் அடைவர். அத்துன்பம் அடைந்து மனிதஇனம் கருவிலிந்து பிறக்கும் நிலையை அறியமுடிகிறது எனலாம் .இவ்வாறு திருவாசம் போற்றித் திருஅகவல் எனும் பகுதியில் உயிர் பிறப்பு பற்றிய மருத்துவ அறிவியலைக் காணமுடிகிறது எனலாம்.

## 2. நோயும்மருந்தும்

திருக்குறளில் உடல்சார்ந்த நோய்கள் வருவதற்கான காரணங்களையும் , அவை வராதிருக்கும் முறைகளையும் , அவை வந்தால் தவிர்க்கும் வழிகளையும் பற்றிய செய்திகள் தரபெற்றுள்ளன.

நோய்நாடிநோய்முதல்நாடிஅதுதணிக்கும்

வாய்நாடிவாய்ப்பச்செயல் (குறள் – 948)

என்பது வள்ளுவம். நோய் வருவதற்கான காரணத்தையும் ,நோய் இன்னதென்பதையும் ஐயமறத் துணிந்து மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல் ,கூடுதல் முதலிய முறைகளை மேற்கொண்டு அந்நோயைப் போக்க வேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும். இன்றைய மருத்துவ முறையும் இதனையொட்டியே உள்ளது. அவ்வண்ணமே நோயுற்றவனின் வயது,

வலி , வேதனை காலவேறுபாடுகள் முதலிய எல்லாவற்றையும் நோக்கிக் கருத்தில் கொண்டு சிகிச்சை செய்தல் வேண்டும் என்பதை,

உற்றான்அளவும்பிணிஅளவும்காலமும்

கற்றான்கருதிச்செயல் (குறள்-949)

என்று குறிப்பிட்டுள்ளார் வள்ளுவப்பெருந்தகை.

**3. உடல்நலம்சார்ந்தவை**

உடல் நலம் பேணுதல் பற்றிய மருத்துவ அறிவியல் செய்திகள் தமிழ் இலக்கியங்களி விரவிக் கிடக்கின்றன எனலாம். சங்ககாலத்திய மக்கள் தங்களின் உணவுமுறைகளை இயற்கையோடு இணைந்த மருத்துவம் சார்ந்த நிலையில் அமைந்திருப்பதால் ஆரோக்கியத்துடனான வாழ்வையும் மேம்பட்ட உடல்நலனையும் நற்சிந்தனையினையும் கொண்டிருந்தனர்.பண்டைத் தமிழரின் உணவியலை மீட்டெடுத்து நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டிய தேவையும் நமக்கு இருக்கத்தான் செய்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்றைய மருத்துவ அறிவியல் உணவு உண்ணும் போது பேசிக் கொண்டோ ,படித்துக் கொண்டோ, தொலைக்காட்சி பார்த்துக் கொண்டோ உண்ணாமல் , உணவின் மீது மட்டுமே கவனம் வைத்து உண்ண வேண்டும் என்றும், இல்லையெனில் செரிமானக் கோளாறுகள் உண்டாகும் என்றும் அறியவிக்கிறது. மேலும் உணவு உண்ணும் போது அமர்ந்து பொறுமையுடன் உண்ணவேண்டும்., படுத்துக்கொண்டும் நின்றுகொண்டும் திறந்த வெளியிலும் உண்ணக் கூடாது என்றும் நெறிமுறையைக் கடந்து எதையும் உண்ணக் கூடாது என்றும் ஆசாரக் கோவை கூறுகின்றது

உண்ணுங்கால் நோக்கும் திசைக் கிழக்கு கண்ணமர்ந்து

தூங்கான் துளங்காமை நன்கு இரீஇ யாண்டும்

பிறிதியான் நோக்கான் உரையான் தொழுது கொண்டு

உண்க உகாமை நன்கு (ஆசாரக் கோவை-20)

'கூழானாலும் குளித்துக்குடி' என்பது உண்ணும் முறையில் தூய்மையை உணர்த்தும் முது மொழியாகும். கைகளை சுத்தமாய் கழுவி உண்ணவேண்டும் என மருத்துவ அறிவியல் கூறுவதை

நீராடிக் கால் கழுவி (ஆசாரக்கோவை-18) என்னும் பாடல் இயம்புகின்றது.

உளவியல் உள்ளத்தின் கோலங்களையும், கோணங்களையும் அதன் விழைவுகளையும் விளைவுகளையும் ஆராய்கிற ஓர் அறிவியலாகும்(தி.சு.நடராசன் திறனாய்வுக் கலை ப-85) இன்றைய மனித வாழ்வில் ஏற்படும் வாழ்வியல் சிக்கல்களையும், குழப்பங்களையும்

அனுபவங்களையும் அறிந்து கொள்ள உளவியல் அணுகுமுறை பயன்படுகிறது கலைப் படைப்பின் உள் அமிழ்த்த பொருள்களையும், ஒரு மனிதன் என்ற முறையில் கலைஞனின் மனவுணர்வுகளையும் உளவியல் ஆராய்ச்சியினால் விளக்கமுடியும் என்பது பிராய்டின் நம்பிக்கை

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்

ஆக்கஞ் செப்பல் நாணுவரை இருத்தல்..... (தொல் -1043)

இங்கு தொல்காப்பியர் கூறும் அளவிற்குரிய நிமித்தங்களும் உளவியல் நோக்கில் அணுகுவதற்கு உரியன. சங்க இலக்கியங்களில் தனிமனிதம் சார்ந்த பல்வேறு உளவியல் கூறுகள் இருப்பதை மேற்சொன்ன இலக்கணத்தின் வழி அறிய முடியும்

மிக அதிக ஒளியைக் கண்களால் பார்த்தல் கூடாது மின்னல், ஒளி,எரிநட்சத்திரம், சூரியன் இவற்றின் ஒளியை நேரடியாக நாம் பார்க்கும் பொழுது கதிர்வீச்சு அபாயத்தினால் கண்பார்வை பாதிப்பு ஏற்படும் என அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பகலில் அதிக நேரம் தூங்குவதால் உடல் எடை அதிகமாக வாய்ப்புள்ளது என்று மருத்துவ அறிவியல் கூறுகிறது. இக்கருத்துக்கள் மின்னொளியும் (ஆசாரக்கோவை -51) பகல் வளரார் (ஆசாரக்கோவை -57) என்னும் பாடல்களில் முறையே இடம் பெறுகிறது.

வாழ்வியலை விளக்கும் இலக்கியங்களில அறிவியல் கருத்தினை உணர்த்தும் செய்திகள் விரவிக் காணப்படுகின்றன.ஒரு சமூகத்தின் வரலாற்றறையும் சமகால வாழ்வியல் நிகழ்வையும் அறிந்துகொள்ள இலக்கியங்கள் ஆவணமாகின்றன தமிழ் இலக்கிய வரலாற்றில் அறிவியல் பற்றிய சிந்தனைகள், கருத்துக்கள் தொன்றுதொட்டு வந்துள்ளன அந்த வகையில் தமிழ் இலக்கியதில் வெளிப்படும் மருத்துவம் சார்ந்த அறிவியல் செய்திகளை அறிவதற்கு இக் கட்டுரை ஒரு சான்றாகவே அமைகிறது எனலாம்